உ
சிவமயம்
இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை–625001.

தொலைபேசி : 0452 2344360
Web : www.maduraimeenakshi.org
E-mail : info@maduraimeenakshi.org
maduraimeenakshiamman@tnhrce.com

E-CODE:MDUJT001 ITMS.NO:TNT031962

அனுப்புநர் :
ஆ.அருணாச்சலம், பி.காம்., பி.எல்.,
துணைஆணையர்/செயல்அலுவலர்,



பெறுநர் :
இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை,
மதுரை–600 016.

ந.க.எண்.2264/2021/இ2 (1) நாள் 29.06..2022

ஐயா,

பொருள் : திருக்கோயில் நிர்வாகம் – திருக்கோயில் மற்றும் உபகோயில் வளாகங்களில் வெளிமுகமை மூலம் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு – தொடர்பாக.

––––––

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் பாதுகாப்பு பணிகள் வெளிமுகமை (Out sourcing) முறையில் 1432ம் பசலி 01.07.2022ந் அன்று முதல் 30.06.2023ந் வரையிலான காலத்தில் மேற்கொள்ள இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு .07.2022 ந் தேதி காலை 11.00 மணிக்கு இத்திருக்கோயில் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. மேற்படி ஒப்பந்தபுள்ளி திறப்பில், மதுரை இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் கலந்து கொள்ள தகுந்த உத்திரவு வழங்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல் :–
2) இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, மதுரை.
3) உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, மதுரை.
4) ஆய்வர், இந்து சமய அறநிலையத்துறை, மதுரை தெற்கு.
5) உபரி – 1.



D:\Giri 2022\C2\2264\2264 - OC 05.2022.doc

உ
சிவமயம்
இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,
# மதுரை—625001.

தொலைபேசி : 0452 2344360
Web : www.maduraimeenakshi.org
E-mail : info@maduraimeenakshi.org
maduraimeenakshiamman@tnhrce.com
E-CODE:MDUJT001 ITMS.NO:TNT031962

அனுப்புநர் :
ஆ.அருணாச்சலம், பி.காம்., பி.எல்.,
துணை ஆணையர்/செயல்அலுவலர்,



பெறுநர்
இயக்குநர்
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம்,
தலைமைச் செயலகம்,
சென்னை.

ந.க.எண்.2264/2021/இ2 (2) நாள் 29.06.2022

ஐயா,

பொருள் : திருக்கோயில் நிர்வாகம் – வெளிமுகமை பணி – பசலி 1432 – ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் – நாளிதழில் – காலை பதிப்பில் விளம்பரப்படுத்துதல் – அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் – மதுரை – தொடர்பாக.

----

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை ஏதேனும் ஒரு முன்னனி தமிழ் நாளிதழில் (மாநில அளவிலும்), ஒரு ஆங்கில நாளிதழில் (மாநில அளவிலும்) காலை பதிப்பினில் சிறிய அளவில், குறைந்த கட்டணத்தில் <u>30.06.2022–ந்</u> தேதி அன்று விளம்பரப்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது. விளம்பரப்படுத்திய நாளிதழுடன் பட்டியலை இருபிரதிகளில் இத்திருக்கோயிலுக்கு அனுப்பி வைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை அரசிதழில் (Gazette) வெளியிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு – ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு
மிகை.


D:\Giri 2022\C2\2264\2264 - OC 05.2022.doc

உ

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,மதுரை.

-----

தொலைபேசி எண்.0452–2344360

**ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

ந.க.எண்.2264/2021/இ2 (3) நாள்.29.06.2022

இத்திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரப்படி சேவை பணிகளை மேற்கொள்ள, வெளிமுகமை (Out Sourcing) மூலம் பணியாளர்களை நியமித்திட நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளபடி முன் அனுபவமும், தகுதியும் உள்ள நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரை இடப்பட்ட இரு உறை முறையில் (Two Cover System) ஒப்பந்தபுள்ளிகள் இத்திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பணி விபரம் | டெண்டர் படிவம் விலை ரூ. | முன்வைப்புத் தொகை | பணி செய்யும் காலம் |
|---|---|---|---|---|
| I. | 1432ம் பசலி இத்திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் முன்னாள் இராணுவத்தினர்கள் மூலம் பாதுகாப்பு பணி மேற்கொள்ளுதல் | ரூ.15000/– + GST ரூ.1800/– | ரூ.2,00,000/– | 01/07/2022 முதல் 30/06/2023 வரை |

1) ஒப்பந்த படிவம் வழங்கும் நாள் :– 30.06.2022 முதல் 14 .07.2022 மாலை 5.00 மணி வரை

2) பூர்த்தி செய்த ஒப்பந்த படிவம் செலுத்த வேண்டிய கடைசி :–15.07.2022 10.00 am பிற்பகல் 2.00மணிவரை

3) ஒப்பந்தபுள்ளி தகுதி காண் உறை (Technical bid) திறக்கும் நாள் மற்றும் நேரம் :15.07.2022, 11 Am மணி வரை

ஒப்பந்தப்புள்ளி படிவம், கீழ்க்காணும் இணையதளங்களில் கட்டணம் இல்லாமல் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி கொள்ளலாம். www.tenders.tn.gov.in, www.tnhrce.gov.in இதர விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் அலுவலகத்தில் அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். மேலும் இந்த ஒப்பந்தபுள்ளி குறித்து ஏதேனும் திருத்தங்கள்/மாற்றங்கள் இருந்தால் மேற்குறிப்பிட்ட இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும்.

கருமுத்துதி.கண்ணன்
தக்கார்

ஆ.அருணாச்சலம்,பி.காம்.,பி.எல்.,
துணை ஆணையர்/செயல் அலுவலர்

உ

# Arulmigu Meenakshi Sundareswarar Temple, Madurai

-----

Telephone No:0452-2344360

## Tender Notice

R.C.No.2264/2021/C2 (4) Date:29.06.2022

Sealed Tenders are Invited by the Joint Commissioner/Executive Officer, Arulmigu Meenakshi Sundareswarar Temple, Madurai from the reputed Outsourcing Agencies for the description of work mentioned in the table below, under **Two cover system** for Arulmigu Meenakshi Sundareswarar Temple and its sub temples.

| SI.No. | Description of work | Tender schedule cost | EMD | Duration of Service |
|---|---|---|---|---|
| 1. | Supply of, Ex-serviceman for Security service in Main and sub temple for 1432 Fasali | Rs.15000/– + GST Rs.1800/– | Rs.2,00,000/– | 01/07/2022 to 30/06/2023 |

1. Date of Issue of Tender Schedule :- From 30.06.2022 to 14.07.2022, 5.00PM
2. Last date and Time of Tender Submission :- 15.07.2022 upto 10.30 am
3. Date of opening of Technical bid :- 15.07.2022 at 11.00 am

Tender Schedule can also be downloaded from www.tenders.tn.gov.in , www.tnhrce.gov.in, at free of cost. Other Terms and conditions should be obtained from Joint Commissioner/Executive Officer's, office, during office working day and working hours. The corrections/modification if any, regarding above tender, will be notified only in the above websites.

Karumuthu T.Kannan
Thakkar

A.Arunachalam,B.com.,B.L.,
Joint Commissioner/Executive Officer,

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,மதுரை.

-----

ந.க.எண்.2264/2021/இ2 (5) நாள்29.06.2022

| | | | |
|---|---|---|---|
| 01. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர், பதவி, முகவரி | : | திரு.ஆ.அருணாசலம்,எம்.ஏ.,பி.எல்.,<br>இணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,<br>மதுரை–01. |
| 02. அ) | திட்டத்தின் பெயர்/கொள்முதல் | : | 1432ம் பசலி இத்திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் முன்னாள் இராணுவத்தினர்கள் மூலம் பாதுகாப்பு பணி மேற்கொள்ளுதல். |
| ஆ) | பணி அல்லது கொள்முதல் நடைபெறும் மாவட்டங்களின் பெயர்கள் | : | மதுரை |
| 03. | எந்த இடத்தில் எந்த தேதி வரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமாக படிவம் கிடைக்கும் என்ற விபரம் | : | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், அலுவலகம்<br>30. 06.2022 முதல் 14.07.2022 வரை<br>ரூ.15000 + GST 1800/–<br>www.tenders.tn.gov.in &<br>www.tnhrce.gov.in<br>இணையதளங்களில் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 04. | செலுத்தப்பட வேண்டிய முன்வைப்பு தொகை விபரம் | : | பாதுகாப்பு பணி ரூ.2,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 05. | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும் நேரமும் மற்றும் இடமும் | : | 15.07.2022 10.30 am மணி வரை வரிசை 1ல் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் |
| 06. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | : | 15.07.2022 11.00 am மணி வரிசை 1ல் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலை |
| 07. | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமான தகவல் | : | ஒப்பந்தப்படிவத்தில் உள்ளபடி |

உ

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,மதுரை.

-----

தொலைபேசி எண்.0452–2344360

<u>டெண்டர் நிபந்தனைகள்</u>

ந.க.எண்.2264/2021/இ2–6 நாள்.29.06.2022

<u>இரு உறை முறை (Two Cover System)</u>

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் ஐந்து கோபுர வாயில்களில் பொருட்கள் பாதுகாப்பு அறைகளில் உள்ள ஸ்கேனரில் பக்தர்களின் பொருட்களை ஸ்கேன் செய்தல் பணி, திருக்கோயில் உட்புறம் காவல் பணி மற்றும் உபகோயில்களில் இரவு காவல் பணிக்கு இந்து மதத்தை சேர்ந்த முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு பாதுகாவலர்களை வெளிமுகமை (Out Sourcing) முறையில் நியமித்திட முன் அனுபவமும், முன் தகுதியும், ISO தரச்சான்றிதழ் பெற்ற, அரசு பதிவு பெற்ற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகளை திருக்கோயில் நிர்வாகம் வரவேற்கிறது. மூடி முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் இத்திருக்கோயில் அலுவலகத்திற்கு <u>15.07.2022–ந்</u> தேதி 10.30 am மணிக்குள் வந்து கிடைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்<u>15.07.2022–ந்</u> தேதி 11<u>.00 am</u> மணிக்கு இத்திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களால் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர் மற்றும் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) துணை ஆணையர்/ செயல் அலுவலர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை என்ற பதவிப் பெயரில் மதுரையில் மாற்றத்தக்கதாக வங்கி வரைவோலை மூலம் செலுத்தப்பட வேண்டும்.

<u>குறிப்பு</u>

| | | |
|---|---|---|
| 01. | ஒப்பந்தக்காலம் | பணி ஆணை வழங்கப்பட்ட நாள் முதல் 30.06.2023 வரை |
| 02. | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை | ரூ.15,000/– + வரி ரூ.1800/– (இத்திருக்கோயில் கருவூலத்தில் அலுவலக வேலை நாட்களில் பகல் 12.30 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும். |
| 03. | ஒப்பந்தப்புள்ளி விற்பனைக்காலம் | 30.06.2022 முதல் 14.07.2022 வரை மாலை 5.00 மணி வரை (அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் மட்டும்) |
| 04. | பூர்த்தி செய்த ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கடைசி நாள் | 15.07.2022 (பிற்பகல் 10.30 am மணி வரை) |
| 05. | ஒப்பந்தப்புள்ளி பெட்டி உள்ள இடம் | திருக்கோயில் அலுவலகம் |
| 06. | ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் | 15.07.2022 பிற்பகல் 11.00 am மணி (தொழில்நுட்ப உறை) |

| | | |
|---|---|---|
| **07.** | ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்குமிடம் | மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அலுவலகம், கீழ்காணும் இனைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். www.tenders.tn.gov.in, www.tnhrce.gov.in, |
| **08.** | முன்வைப்புத் தொகை | ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) |

உ

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

-----

ந.க.எண்.2264/2021/இ2 (7) நாள். 29.06.2022

பாதுகாப்பு பணி நியமனத்திற்கான விவரம் (சுழற்சி முறை)

| வ.எண் | பணியிடம் விவரம் | பணியாளர்கள் விபரம் (எண்ணிக்கையில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | காலை | மாலை | இரவு | மொத்தம் |
| 01. | இத்திருக்கோயிலின் ஐந்து கோபுர வாயில்களில் உள்ள பொருட்கள் பாதுகாப்பு அறையில் பொருட்களை ஸ்கேன் செய்யும் பணி | 5 | 5 | --- | 10 |
| 02. | அம்மன் சன்னதி முதல் மற்றும் இரண்டாம் பிரகாரம் | 4 | 4 | --- | 8 |
| 03. | சுவாமி சன்னதி முதல் மற்றும் இரண்டாம் பிரகாரம் | 3 | 3 | --- | 6 |
| 04. | தெற்கு நுழைவு வாயில் விபூதி விநாயகர் அருகில் பக்தர்களை வரிசைபடுத்தும் பணி | 1 | 1 | --- | 2 |
| 05. | ஆயிரங்கால் மண்டபம் | 1 | 1 | --- | 2 |
| 06. | நான்கு ஆடி வீதிகள் முழுவதும் | 1 | 1 | --- | 2 |
| 07. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 1 | 1 | 1 | 3 |
| 08. | எல்லீஸ் நகர் வாகன பாதுகாப்பு பணி | 1 | 1 | 1 | 3 |
| 09. | திருவாதவூர், அருள்மிகு திருமறைநாதசுவாமி கோயில் | --- | --- | 1 | 1 |
| 10. | கொந்தகை, அருள்மிகு தெய்வநாயகப் பெருமாள் கோயில் | --- | --- | 1 | 1 |
| 11. | அருள்மிகு செல்லத்தம்மன் கோயில் | --- | ---- | 1 | 1 |
| 12. | செல்லூர் அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயிலில் உள்ள சிலைகள் பாதுகாப்பு மையம் | --- | --- | 1 | 1 |
| 13. | கோச்சடை மற்றும் விளாங்குடி தோப்பு பாதுகாப்பு பணி | 2 | 2 | --- | 4 |
| 14. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம் | ---- | ---- | 1 | 1 |
| 15. | அம்மன் சன்னதி வெளியேறும் வழி | 1 | 1 | --- | 2 |
| 16. | அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில் தெப்பக்குளம் | --- | --- | 1 | 1 |
| 17. | அருள்மிகு அய்யம் பொழில் ஈஸ்வரர் திருக்கோயில், ஆமூர் | 1 | --- | --- | 1 |
| 18. | மேலபெருமாள் மேஸ்திரி வீதி வாகன பாதுகாப்பகம் | 1 | 1 | 1 | 3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19. | திருக்கோயில் தட்டச்சர் / கணினி பணியாளர் | 1 | 1 | ---- | 2 |
| 20. | திருக்கோயில் டிராக்டர் ஓட்டும் பணி (கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்) | 1 | ---- | ---- | 1 |
| 21. | திருக்கோயில் பேட்டரிகார் / ஆம்புலன்ஸ் ஓட்டும் பணி (வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்) | 1 | ---- | ---- | 1 |
| 22. | திருக்கோயில் பிளம்பர் பணி | 1 | ---- | ---- | 1 |
| 23. | டிப்ளமோ சிவில் இன்ஜினியர் (DCE) கட்டுமானத்துறையில் இரண்டு வருட முன் அனுபவத்துடன் Auto Cad மூலம் வரைபடம் தயாரிக்க அனுபவம் வாய்ந்தவர்கள், கணினி அறிந்தவர்கள் | 2 | ---- | ---- | 2 |
| 24. | திருக்கோயில் குங்குமம் தயாரிப்பு மிஷின்களை இயக்க தெரிந்த I.T.I முடித்துள்ள மெஷினிஷ்ட் | 1 | ---- | ---- | 1 |
| 25. | மின்பிரிவு பணிக்கு I.T.I முடித்துள்ள மின் உதவியாளர் | 2 | --- | ---- | 2 |
| 26. | கூடல் செங்குளம் பண்ணை விவசாய காவல் பணியாளர்கள் | 2 | --- | --- | 2 |
| 27. | தெப்பக்குளம் அருகில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான காலி இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பழுதான கல் தூண்களை பாதுகாக்கும் பணி | --- | --- | 1 | 1 |
| 28. | பொன்மேனி காலியிடத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பழுதான கல்தூண்களை பாதுகாக்கும் பணி | --- | --- | 1 | 1 |
| 29. | தெப்பக்குளம் வாகனங்கள் நிறுத்துமிடம் | 1 | 1 | 1 | 3 |
| 30. | தெப்பக்குளம் வைகை ஆற்றில் உள்ள இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பெரிய கிணறு காவல் மற்றும் மாரியம்மன் தெப்பக்குளம் பராமரிப்பு பணி | 1 | --- | --- | 1 |
| 31. | நாகமலை புதுக்கோட்டை அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயில் இரவு காவல் பணி | --- | --- | 1 | 1 |
| 32. | செல்லூர் அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில் இரவு காவல் பணி | --- | --- | 1 | 1 |
| 33. | குங்குமம் தயாரிப்பு பணிக்கு | 1 | --- | --- | 1 |
| 34. | மீனாட்சி தியேட்டர் பாதுகாப்பு பணி | 2 | --- | 2 | 4 |
| 35. | பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் | 1 | 1 | --- | 2 |
| | (ஆறு பெண்கள் உள்பட) மொத்தம் | 39 | 24 | 16 | 79 |

ந.க.எண்.2264/2021/இ2 (8) நாள்.29.06.2022

## முக்கிய நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி இரு உறை முறையில் வழங்கப்பட வேண்டும். முதல் உறையில் தொழில்நுட்ப விவரங்களுடன் (Technical Bid) மற்றும் அனைத்து விவரங்களுடன் வழங்கப்பட வேண்டும். இரண்டாவது உறையில் விலை விவரம் மட்டும் வழங்கப்பட வேண்டும். (Price Bid) இரண்டு உறையிலும் உறையின் தலைப்பில் முழு விவரங்கள் எழுதப்பட வேண்டும். இரண்டு உறையும் சேர்த்து ஒரு உறையில் துணை ஆணையர்/செயல் அலுவலர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை என்ற விலாசமிட்டு வழங்கப்பட வேண்டும். தொகை விவரம் இணைக்கப்பட வேண்டும்.

   ஒப்பந்தத்தில் தேர்வு செய்யப்படும் நிறுவனப் பணியாளர்களுக்கு, பக்தர்களுக்கு இடையூறு இன்றி நேர்த்தியாக பணிபுரியும் வண்ணம் பயிற்சி வழங்கப்பட வேண்டும். ஒப்பந்த நிறுவனம் வருமானவரி, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, ஆயுள் காப்பீடு மற்றும் மத்திய, மாநில அரசின் அனைத்து தொழிலாளர் சட்ட விதிகளின்படி அனைத்து கணக்குகள் மற்றும் அலுவல்களை பராமரித்து கொள்ள வேண்டும். எவ்வித வகையிலும் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பு ஏற்றுக் கொள்ளாது. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், இணைப்புகள் கண்டிப்பாக எண்ணிட்டு வரிசைப்படி அட்டவணை தயாரித்து வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பு பணிக்கு தொடர்பில்லாத விவரங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

2. ஒப்பந்த நிறுவனம் கடந்த இரண்டு நிதியாண்டுகளில் (2019–2020), (2020–2021) ஆண்டு ஒன்றுக்கு தலா ரூ.1.50 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம்) அதற்கு மேல் வியாபார வரவு – செலவு Income Tax acknowledgement 3Cb and CP Forms, Profit and Loss Account, Balance sheet, Detail schedule of balance sheet, இவற்றில் எல்லாவற்றிலும் Auditor and Proprietor சான்று செய்து இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர் கம்பெனி சட்டம் 1956ன்படி பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் பங்குதாரர் சட்டம் 1932ன்படி பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் நிறுவனம் ஒப்பந்த தொழிலாளர் (ஒழிப்பு) வரன்முறைபடுத்துதல் சட்டம் (Contract Labour ( Abolition) and Regulation Act) ன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், தனியார் பாதுகாப்பு நிறுவனம் (Private Security) தமிழக காவல் துறை அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.

3. நியமனம் செய்யப்படும் பாதுகாவலர்கள் கட்டாயமாக முன்னாள் இராணுவத்தினராகவும், மற்றும் 30 வயது முதல் 55 வயதுக்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். இந்து மதத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும். நல்ல உடல் தகுதி உள்ளவராகவும் இருக்க வேண்டும். நியமனம் செய்யப்படும் பாதுகாவலர்களில்

முன்னாள் இராணுவத்தினர்கள் 46 நபர்களுக்கு குறைவில்லாமலும், மேலும் பெண்கள் பாதுகாவலர்கள் 6 நபர்களும் பணிக்கு நியமிக்கப்பட வேண்டும்.

4. முதல் உறை திறப்பின் போது முதல் உறையில் (தொழில்நுட்ப உறை) சமர்ப்பித்துள்ள விபரங்கள் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களில் தகுதியை பரிசீலனை செய்யப்படும். அதில் தகுதி பெற்றவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மட்டுமே இரண்டாவது உறை திறப்பிற்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இரண்டாவது உறை திறப்பிற்கு நாள் நிர்ணயம் செய்யப்பட்டு தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அன்றைய தினம் நேரில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர் முன்னிலையில் மற்றும் துறை அலுவலர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திரும்ப வழங்கப்பட மாட்டாது.

6. ஒப்பந்த படிவத்தில் விலை மற்றும் தொகை குறிப்பிடப்பட வேண்டிய அனைத்து இனங்கள் மற்றும் கலங்கள் முறையாக செல்லத்தக்க வகையில் இந்திய பண மதிப்பில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒப்பந்தபடிவம் பரிசீலனையின் போது ஏதாவது ஒரு இனம் அல்லது கலம் பூர்த்தி செய்யப்படாமல் மற்றும் செல்லத்தகாத வகையில் (சேவை கட்டணம் உட்பட) குறிப்பிட்டிருந்தாலோ அன்னாரது ஒப்பந்த விலைப்புள்ளி தகுதி இழந்ததாக கருதி நிராகரிக்கப்படும். எனவே கவனமுடன் ஒப்பந்தப்புள்ளியின் அனைத்து நிபந்தனைகளையும் படித்து புரிந்து கவனமாக பூர்த்தி செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. திருக்கோயில் சொத்துக்களையும், பக்தர்களின் உடமைகளையும் பாதுகாப்பு பணியில் உள்ள பாதுகாவலர்கள் சுழற்சி முறையில் எப்பொழுதும் (24 மணி நேரமும்) பக்தர்களின் பாதுகாப்பிற்கும் அவர்களுக்கு உதவிடும் வகையிலும் பணிபுரிய வேண்டும். ஒப்பந்ததாரர்கள் பகல் பணிபுரிந்த பாதுகாவலர்களை தொடர்ந்து வரும் அடுத்த மாலை பணிக்கு தொடர்ந்து பணிபுரிய அனுப்பக் கூடாது.

8. ஒப்பந்தப்புள்ளியுடன் முன்வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்படும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

9. ஒப்பந்தப்புள்ளியுடன் முன்வைப்புத்தொகை செலுத்தியதற்காக வங்கி வரைவோலை அசலாக இணைக்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் தொகையில் அடித்தல், திருத்தல் செய்யப்பட்டு மேலொப்பம் மற்றும் கையொப்பம் இடாது இருந்தாலும், ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

10. முன் வைப்புத்தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளிபடிவம் கிரையம் செலுத்துவதிலிருந்து எந்த ஒரு நிறுவனத்திற்கும் விதி விலக்கு கிடையாது.

11. ஏற்கனவே ஒப்பந்தக்காரராக இருந்து நிபந்தனைகளின்படி நடக்க தவறியவர்கள் அவர்கள் ரத்த உறவினர்கள், 21 வயது பூர்த்தி அடையாதவர்கள், திருக்கோயில் பணியாளர்கள் அவர்களது ரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினர்கள் மற்றும்

திருக்கோயில் மீது வழக்கு தொடர்ந்தவர்கள் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

12. ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்கும் ஆணையர் அவர்களின் ரத்து அங்கீகாரத்திற்கும் உட்பட்டது.

13. ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஏற்றுக் கொண்ட நாளிலிருந்து 7 தினங்களுக்குள் தனது சொந்த செலவில் ரூ.100/—க்கான முத்திரைத் தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைக்குட்பட்டு ஒப்பந்தப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

14. எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியும் காரணம் கூறாமல் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தப்புள்ளியை நிறுத்தி வைக்கவோ இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. இதை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவருக்கு கிடையாது.

15. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD) மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) நகல் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

16. ஒப்பந்தக்காரரால் நியமிக்கப்படும் பாதுகாவலர்களின் பணி குறித்து உரிய திருக்கோயில் கண்காணிப்பு அலுவலர்கள் சான்று அளிக்கப்பட்டால்தான் ஒவ்வொரு மாதமும் பணி செய்ததற்கான தொகை வழங்கப்படும்.

17. பாதுகாப்பு பணியில் பணிபுரியும் பாதுகாவலர்களின் எண்ணிக்கையை தேவைக்கு ஏற்ப கூட்டவோ குறைக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

18. நிபந்தனைகளை மீறினாலோ, பின்பற்ற தவறினாலோ அல்லது பணியினை சரிவர செய்யவிட்டாலோ, ஒப்பந்தகாரருக்கு எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ரத்து செய்திட திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரமுண்டு. மேலும் முன்வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

19. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மீறப்பட்டால் பாதுகாப்பு பணிக்கான ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். காப்புத் தொகையாக செலுத்திய தொகையை பறிமுதல் செய்யப்படும். மறு ஒப்பந்தப்புள்ளி மூலம் லாபம் ஏற்பட்டால் முன் ஒப்பந்தக்காரருக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது. நஷ்டம் ஏற்பட்டால் நஷ்டத்தையும், வழக்கு தொடர நேரிட்டாலும் வழக்கு செலவுகளையும் வேறு இழப்புகள் இருந்தால் அவைகளையும் முன் ஒப்பந்தக்காரரிடம் வசூல் செய்யப்படும்.

20. நியாயமான வேறு நிபந்தனைகள் இருந்தால் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு நேரத்தில் தெரிவிக்கப்படும்.

21. பாதுகாப்பு பணியில் உள்ள பணியாளர்களுக்கு முழு ஆயுள் காப்பீடு, பாதுகாப்பு கருவிகள் ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்பு பணி மேற்கொள்ளும் தனது பணியாளர்களுக்கு தனது சொந்த செலவில் பயிற்சி அளிக்க வேண்டும். பணிபுரியும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது ஒப்பந்ததாரர் முழு பொறுப்பாகும்.

22. பாதுகாப்பு பணிக்கு வருபவர்களுக்கு ஒப்பந்தக்காரர் சொந்தப் பொறுப்பில் தங்குமிடம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். திருக்கோயில் கட்டிடத்தில் தங்குவதெனில் நிர்வாகம் நிர்ணயிக்கும் வாடகை செலுத்த வேண்டும்.

23. ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்தினரால் நியமிக்கப்படும் பாதுகாப்பு பணியாளர்கள் பணியின் போது இறந்தால் அதற்கு ஒப்பந்த நிறுவனமே பொறுப்பேற்று அவருக்கு வழங்க வேண்டிய குடும்ப நலநிதி மற்றும் இதர தொகையினை வழங்க வேண்டும். இதற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பேற்காது.

24. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வேறு பெயர்களுக்கு மாற்றத்தக்கதல்ல.

25. ஒப்பந்தக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டபின் பணியிலிருந்து விலகிக் கொள்ள விரும்பினால் முன்வைப்புத் தொகை மொத்தமும் திரும்பி தரப்பட மாட்டாது. பறிமுதல் செய்யப்படும்.

26. விண்ணப்பதாரர் கடந்த 2 வருடங்களில் எந்த ஒரு வாடிக்கையாளராலும் தண்டிக்கப்படவோ அல்லது தன் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவோ இல்லை என்பதற்கான பிராமாணப் பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். அதில் கூட்டுத் தொழில் நிறுவனமாக இருப்பின் அதன் பங்குதாரர்களும் வாடிக்கையாளர்களால் கருப்பு பட்டியலில் சேர்க்கவில்லை. பணி தொடர்பான குறைபாடுகளுக்கு நீதிமன்றத்தில் வழக்காடவோ இல்லை என்ற விண்ணப்பத்துடன் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்.

27. விண்ணப்பதாரரால் ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் பொய்யானவை என தெரியவருமானால் முன்வைப்புத் தொகை முழுவதும் திருப்பித் தரப்பட மாட்டாது அல்லது பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு இத்திருக்கோயில் நிர்வாகத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பீடுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தாரோ பொறுப்பாக்கப்படுவார்.

28. வருமான வரி விதிகளின்படியும் அன்றாட விதிகளுக்குட்பட்டும் பட்டுவாடா செய்யப்படும் தொகையிலிருந்து திருக்கோயில் மூலம் வருமானவரி பிடித்துக் கட்டப்படும். அப்படிச் செய்யக்கூடாது என்றால் விண்ணப்பதாரர் வருமானவரி இலாகா அலுவலகத்திலிருந்து தகுந்த விதி விலக்குச் சான்றிதழினை சமர்ப்பிக்க வேண்டும்.

29. சரக்கு மற்றும் சேவை வரி கட்டணத்தை ஒப்பந்தகாரரால் **ஒவ்வொரு மாதமும் சம்பந்தப்பட்ட** தலைப்பில் செலுத்தி, செலுத்துச்சீட்டை (Chalan) பட்டியலுடன் தாக்கல் செய்ய வேண்டும். அப்பொழுது மட்டுமே பட்டியல் தொகை வழங்கப்படும்.

**30.** பாதுகாப்பு பணியில் ஈடுபடும் பாதுகாவலர்களின் பணிகளை கண்காணிக்க இரண்டு பேருக்கு குறைவில்லாமல் பாதுகாப்பு கண்காணிப்பாளர்களை நியமிக்க வேண்டும். இவர்கள் இராணுவத்தில் **சுபேதார்** அந்தஸ்துக்கும் குறைவில்லாத பணியிடத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்க வேண்டும். மொத்தம் கேட்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர்களின் எண்ணிக்கை மேற்கண்ட இரண்டு நபர்களும் உள்ளடங்கியது ஆகும்.

**31.** நிறுவனங்களின் கூடுதல் விவரங்கள் அதிகமாக இருப்பின் தனி இணைப்பாக கொடுக்கவும். மேலும் பாதுகாப்பு பணிக்கான விவரங்களை மட்டுமே இணைக்க வேண்டும் தொடர்பில்லாத விவரங்களை இணைக்ககூடாது.

**32.** வேலைக்கு அமர்த்தப்படப் போகும் நபர்கள், திருக்கோயில் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு வேலை செய்வோம் என்று உறுதிப் பத்திரம் மூலம் உறுதி அளித்திட வேண்டும். திருக்கோயிலில் பாதுகாப்பு பணி மேற்கொள்பவர்கள் ஒழுக்க நெறி மற்றும் திருக்கோயில் நெறிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும்.

**33.** பணியாளர்களின் முழு முகவரி வயது, அடையாளம் ஆகியவற்றுடன் ஆட்குறிப்பு (Bio Data) திருக்கோயில் நிர்வாகத்திடம் வழங்க வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களை கொண்ட பணியாளர்களை அமர்த்த வேண்டும். புகைப்பிடித்தல், மது அருந்துதல் பழக்கம் உடையவர்களை பணிக்கு அமர்த்தக்கூடாது. பணியாளர்களை மாற்றினால் நிர்வாகத்திற்கு முன் கூட்டியே தகவல் தெரிவித்து புதிய ஆட்களின் விபரம் தெரிவிக்க வேண்டும்.

**34.** பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் நபர்கள் 30 வயது நிரம்பியவர்களாகவும், 55 வயதுக்குட்பட்டவர்களாகவும் 165 செ.மீ உயரத்திற்கு மேற்பட்டவர்களாகவும் நல்ல உடல் தகுதி உள்ளவராகவும் இருக்க வேண்டும். பணிக்கு வரும்பொழுது தலைமுடி சீராக வெட்டியும் முகச்சவரம் செய்தும், சீருடை அணிந்தும் வர வேண்டும். அதேபோன்று பெண் பாதுகாவலர்கள் சீருடை அணிந்து பணிக்கு வரவேண்டும். சலவைப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது. திறனுடைய மற்றும் பயிற்சி பெற்ற பணியாளரை ஒப்பந்ததாரர்கள் நியமிக்க வேண்டும்.

**35.** சேவார்த்திகள் யாருக்கேனும் உடல் நலக்குறைவு ஏற்படுமாயின் அருகில் உள்ள மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு வர தயார் நிலையில் பணியில் இருக்க வேண்டும். பாதுகாவலர்கள் விழிப்புடனும், விவேகத்துடனும் செயல்பட வேண்டும்.

**36.** பாதுகாப்புப் பணியில் இருக்கும் பாதுகாப்பு பணியாளர்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டாலோ, திருக்கோயில் நிர்வாகத்திற்கு நிறைவான வகையில் பணியாற்றவில்லை என்றாலோ, பதில் ஆள் உடனடியாக அமர்த்தப்பட வேண்டும்.

**37.** ஒப்பந்தக்காரர் இரவும், பகலும் பாதுகாப்பு பணியாளர் பணியினை கவனத்துடன் இடைவிடாது கண்காணித்து வர வேண்டும். திருக்கோயில் உயர் அலுவலர்களின் அறிவுரைப்படி திருப்திகரமான முறையில் பணியாற்ற வேண்டும்.

38. திருக்கோயில் சொத்துக்கள் காணாமல் போனலோ, திருடப்பட்டாலோ, ஒப்பந்த நிறுவனம் விசாரணைக்கு உதவிட வேண்டும். காவல்துறைக்கு புகார் அளித்து இழந்த பொருட்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதுகாவலரின் கவனக்குறைவால் இழப்புகள் ஏற்படுமாயின் ஒப்பந்த நிறுவனம் பொறுப்பு ஆகும். காணாமல் போன பொருட்களின் மதிப்பு ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்படும் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

39. திருக்கோயில் பாதுகாப்பு பணியில் இருக்கும் பணியாளர்களுக்கும், திருக்கோயில் நிர்வாகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அனைத்து மத்திய மாநில சட்டம் மற்றும் விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஒப்பந்த நிறுவனமே பாதுகாப்பு பணியாளர்களுக்கு முழுபொறுப்பாகும்.

40. பாதுகாப்பு பணிக்குத் தேவையான மின்னணு உபகரணங்கள் (Electronic Equipments) மெட்டல் டிடெக்டர் போன்றவைகளை இயக்குவதற்கு தகுதியான 2 நபர்களை பணியில் அமர்த்த வேண்டும்.

41. இத்திருக்கோயிலில் பணிபுரியும் பாதுகாப்பு பணியாளர்களுக்கு மட்டும் தனியாக ஒவ்வொரு மாதங்களில் பட்டியலுடன் அந்தந்த மாத வேலையாட்களின் கணக்கில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (E.P.F) மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீட்டு (E.S.I) தொகை சந்தா, சரக்கு மற்றும் சேவை வரி (GST) செலுத்திய இரசீது மற்றும் ஆன்லைன் பேமெண்ட் சலான் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு வரப்பெறாத பட்டியல்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. பணியாளர்களுக்கான EPF, ESI சந்தா போன்றவைகளை ஒப்பந்தக்காரர்கள் உரிய காலத்தில் செலுத்த வேண்டும்.

42. இந்த ஒப்பந்தப்புள்ளியானது மதுரை மாவட்ட நீதிமன்ற ஆள்வரைக்கு மட்டுமே உட்பட்டதாகும். இந்து மதத்தைச் சார்ந்த நபர்கள் மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும்.

43. பணியில் அமர்த்தப்படும் முன்னாள் இராணுவத்தினர்கள் அனைவருக்கும், முழுமுகவரி, இருப்பிட விவரங்களுடன் சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் நன்னடத்தை சான்று பெற்று பணியில் சேருவதற்கு முன்னரே அலுவலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

44. அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒவ்வொரு மாத சம்பளத் தொகையை அந்தந்த பணியாளர்கள் பெயரில் ஒரே வங்கியில் வங்கி கணக்கு துவங்கி (இ.சி.எஸ்) மூலம் வழங்கப்பட வேண்டும். சம்பளம் வழங்கப்பட்ட விவரத்தினை பிரதி மாதம் சம்பளப் பட்டியலுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

45. பணியாளர்களுக்கு வழங்கப்படும் நு.ஞ.கு சரக்கு மற்றும் சேவை வரி (GST) மற்றும் E.S.I ஆகியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் செலுத்தி அதன் விபரத்தை

திருக்கோயிலில் சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்த பணியாளர்களுக்கு E.P.F மற்றும் E.S.I எண்களை தெரிவிக்க வேண்டும். ஒப்பந்தப்பணியாளர்களுக்கு பெறப்படும் EPF மற்றும் ESI அடையாள அட்டையின் நகலினை திருக்கோயிலுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

46. பாதுகாப்பு பணியாளர்கள் அனைவருக்கும் பயோமெட்ரிக் வருகை பதிவு செய்யப்பட வேண்டும். பயோமெட்ரிக் வருகைப் பதிவேடு மற்றும் ஒப்பந்ததாரரால் பேணப்படும் வருகை பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே பட்டியல் தொகை கணக்கீட்டு வழங்கப்படும் இதில் வித்தியாசம் இருப்பின் அதற்குரிய தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

47. இத்திருக்கோயிலில் மின்பிரிவு பணிகளுக்கு ஐ.டி.ஐ தேர்ச்சி பெற்ற ஏசி இயந்திரம் இயக்கவும், பராமரிக்கவும் முன் அனுபவம் உள்ள இரண்டு பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். (முன்னாள் இராணுவத்தினர்கள் தவிர்த்து).

48. கூடல் செங்குளம் பண்ணையில் நன்கு விவசாயம் செய்ய தெரிந்த நபராகவும், விவசாயம் தொடர்பான பணிகள் சம்பந்தமாக டிராக்டர் உள்பட விவசாய கருவிகள் இயக்க தெரிந்த நபராகவும், மண்வெட்டியை கையாள தெரிந்த நபராகவும் கால்நடைகளை பற்றிய அறிவும் பராமரிக்க தெரிந்தவராகவும், உள்ளூர் நபராகவும் இருத்தல் வேண்டும். கால்நடைகளை மேய்க்கும் பணியும் செய்ய வேண்டும். விவசாய காவல் பணியாளர்கள் 30 வயது நிரம்பியவராகவும், 45 வயதுக்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

49. இத்திருக்கோயிலில் கணினி, கையடக்க கணினி, தொடர்பான பணிகளை மேற்கொள்ளுவதற்கு நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். இளங்கலை கணினி பட்டப்படிப்பு அல்லது பட்டயம் (டிப்ளமோ) தேர்ச்சி பெற்ற முன் அனுபவம் உள்ள இரண்டு பணியாளர்கள், டிராக்டர் ஓட்டும் பணிக்கு கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றவர் ஒருவர், டிப்ளமோ சிவில் இஞ்சினியர் பணிக்கு கட்டுமானத்துறையில் மூன்று வருட முன் அனுபவம் மற்றும் AUTO CAD வரைபடம் தயாரிக்க அனுபவம் வாய்ந்தவர்கள், கணினி அறிந்தவர்கள் இரண்டு நபர்கள், திருக்கோயிலில் உள்ள குங்குமம் தயாரிக்கும் இயந்திரங்களை பாதுகாப்பாக இயக்க தெரிந்த ஐ.டி.ஐ. முடித்துள்ள மெஷினிஸ்ட் ஒருவர் கூடல் செங்குளம் பண்ணைக்கு விவசாய பணியாளர்கள் இருவர் பணியமர்த்தப்பட வேண்டும். (முன்னாள் இராணுவத்தினர்கள் தவிர்த்து).

50. கணினி பணி மற்றும் மின் உதவியாளர் பணிக்கு அமர்த்தப்படும் நபர்கள் 30 வயது மிகாமலும், மிஷின் இயக்குநர் பணிக்கு அமர்த்தப்படும் நபர் 35 வயது மிகாமலும், மூன்று வருடம் முன் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். டிப்ளமோ சிவில் இன்ஜினியர் பணிக்கு அமர்த்தப்படும் நபர்கள் 30 வயது மிகாமலும், டிராக்டர் ஓட்டுநர் பணிக்கு அமர்த்தப்படும் நபர் 30 வயது நிரம்பியவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றவராக இருக்க வேண்டும். விவசாய காவல் பணியாளர்கள் 30 வயது நிரம்பியவராகவும், 45 வயதுக்குட்பட்டவராகவும் இருக்க

வேண்டும். திருக்கோயில் பேட்டரிகார் ஓட்டுநர் பணிக்கு அமர்த்தப்படும் நபர் 30 வயது நிரம்பியவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றவராக இருக்க வேண்டும். பிளம்பர் பணிக்கு அமர்த்தப்படும் நபர் 30 வயது நிரம்பியவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் பிளம்பிங் பணிகள் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

51. டிப்ளமோ சிவில் இன்ஜினியர் பணிக்கு அமர்த்தப்படும் நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.13,000/– (ரூபாய் பதிமூன்றாயிரம்)க்கு மிகாமல் குறிப்பிடப்பட வேண்டும். மின் உதவியாளர், மிஷின் இயக்குநர் பணிக்கு அமர்த்தப்படும் ஐ.டி.ஐ தேர்ச்சி பெற்ற நபர் ஒருவர் மற்றும் டிராக்டர் ஓட்டுநர்–க்கு, கூடல் செங்குளம் பண்ணை விவசாய காவல் பணியாளர்கள் நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்)–க்கு மிகாமல் குறிப்பிடபட வேண்டும். திருக்கோயில் பேட்டரிகார் ஓட்டுநர், திருக்கோயில் பிளம்பர் பணிக்கு அமர்த்தப்படும் நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்)–க்கு மிகாமல் குறிப்பிட வேண்டும்.

52. ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ளும் நிறுவனம் ஒப்பந்த காலத்தில் கடைசி மாதத்தில் நிறுவன பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கி, அதற்கான விவரப்பட்டியலை திருக்கோயிலில் சமர்ப்பித்த பின்னரே கடைசி மாத பட்டியல் தொகை வழங்கப்படும்.

53. அரக்கு முத்திரை இடப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படமாட்டாது.

54. ஒப்பந்தப்புள்ளி விலை விபர அட்டவணை அஞ்சலில் அனுப்பப்படமாட்டாது.

55. ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் பட்டியல்கள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் தங்கள் நிறுவன பணியாளர்களுக்கான இ.எஸ்.ஐ, இ.பி.எப், சேவை வரி, அந்தந்த பணியாளர்கள் பெயரில் உரிய நிறுவனங்களில் செலுத்தியதற்கான இரசீதுகள் பிரதிமாத சம்பள பட்டியலுடன் பயோ மெட்ரிக் வருகைப் பதிவேட்டுடன் சமர்ப்பிக்க வேண்டும் தவறினால் பட்டியல் நிராகரிக்கப்படும். காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் பட்டியல் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு மாதமும் பணியாளர்களுக்கான ஊதியத்தை 7ந் தேதிக்குள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். தவறும்பட்சத்தில் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.1000/– அபராதம் விதிக்கப்படும்.

56. இத்திருக்கோயில் மற்றும் உபகோயில்கள் நடை திறக்கப்பட்டு, நடை சாத்தும் வரையில் பாதுகாவலர்கள் சுழல்முறையில் பணிபுரிய வேண்டும். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் முற்பகல் 05.00 மணி முதல் பிற்பகல் 01.30 மணி வரையிலும், மதியம் 01.30 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் சுழல்முறையில் பணிபுரிய வேண்டும்.

57. முன்வைப்புத் தொகை செலுத்தாமல் வரப்படும் டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறக்கும் நாள் மாறுதலுக்கு உட்பட்டது.

58. வேலைக்கு அமர்த்தப்படும் பாதுகாவலர்கள் இத்திருக்கோயிலின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். நிர்வாகம் கூறும் உத்திரவுகளை உடனடியாக செயல்படுத்த வேண்டும்.

59. ஒப்பந்த பணியாளர்களுக்கு ஏற்படும் உடல்நலக்குறைவு மற்றும் விபத்துகளுக்கு ஒப்பந்த நிறுவனமே பொறுப்பாகும் திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பாகாது.

60. திருவிழா காலங்களில் பாதுகாப்பு பணிக்கு கூடுதலாக பணியாளர்கள் தேவைப்படும் பட்சத்தில் திருக்கோயில் நிர்வாகத்தில் கேட்கப்படும் போது அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த விலைப்புள்ளி அடிப்படையில் ஒப்பந்த பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

61. ஒப்பந்த நிறுவன பணியாளர்களுக்கான இ.பி.எப், இ.எஸ்.ஐ, சேவைவரி உரிய அலுவலகங்களில் செலுத்தாமல் திருக்கோயிலுக்கு புகார் வரப்பெற்றால் ஒப்பந்த நிறுவனங்களின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். மேலும் இ.பி.எப் நிறுவனத்தாரால் தொடரப்படும் வழக்குகள் மற்றும் அபராதத் தொகைக்கு ஒப்பந்த நிறுவனமே முழு பொறுப்பாகும். இதற்கு திருக்கோயில் நிர்வாகம் எவ்வித பொறுப்பும் ஏற்காது.

62. தவிர்க்க முடியாத நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்தபுள்ளி திறப்பு நாளை ஒத்திவைக்க அல்லது இரத்து செய்யவோ இணை ஆணையர்/செயல் அலுவலர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

63. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்த நிறுவனம் அடுத்த பசலி ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெறும் வரை இணை ஆணையர்/செயல் அலுவலர் உத்திரவிற்கும், விதிகளுக்குட்பட்டு ஏற்கனவே ஒப்பந்தம் போடப்பட்டுள்ள விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளின்படி தொடர்ந்து பணிகளை செய்ய வேண்டும்.

64. திருக்கோயிலில் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளும் பணியாளர்கள் சுய லாபத்துக்காக தரிசனத்துக்கு யாரையும் அழைத்து செல்லக் கூடாது. அவ்வாறு கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

65. ஒப்பந்த பணியாளர்கள் பணி நேரத்தில் மது அருந்துதல் மற்றும் புகைப் பிடித்தல் போன்ற செயல்களில் யாராவது ஈடுபட்டால் உடன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் வேறு ஏதாவது புகார் வரப்பெற்றாலோ அன்னாரை உடனே பணி நீக்கம் செய்து விட்டு வேறு ஒப்பந்த பணியாளர்களை பணியமர்த்தி கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒப்பந்த பணியாளர்களை மாற்றம் செய்யும்போது கண்டிப்பாக திருக்கோயில் நிர்வாகம் அனுமதிபெற்று மாற்றம் செய்யப்பட வேண்டும்.

66. ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர் பணிபுரிபவர்களுக்கு மாதந்தோறும் தவறாமல் முறையாக சம்பளம் வழங்க வேண்டும். தாமதமாக வழங்கப்படும் பட்டியல்களுக்கும், குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்படும் பட்டியலுக்கோ திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.

67. பாதுகாப்பு பணி ஒப்பந்தம் இத்திருக்கோயிலுக்கு தேவையில்லை என திருக்கோயில் நிர்வாகம் கருதும்பட்சத்தில் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வர இத்திருக்கோயில்

நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதனை ஆட்சேபிக்க ஒப்பந்தகாரருக்கு உரிமை இல்லை.

68. ஒப்பந்தப்புள்ளி முன்னரோ / பின்னரோ, ஒப்பந்தப்புள்ளி உரிமகாலத்தின் போதோ எந்த நேரத்திலும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளைக் கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ, திருத்தவோ, ஒப்பந்தப்புள்ளியை தள்ளி வைக்கவோ, ஒப்பந்தப்புள்ளியை நிறுத்தவோ, ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கவோ, திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

69. தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் மத்திய, மாநில, மாநகராட்சி, பொதுபணித்துறை சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பணிகள் செய்ததற்கான ஒப்பந்த சான்றிதழ் நகல், இணைக்கப்பட வேண்டும். மேலும் கடந்த 2 ஆண்டுகளில் மாதந்தோறும் 150 நபர்களுக்கு குறைவில்லாமல் வைத்து பணிபுரிந்து இருந்தால் மட்டும் மேற்படி ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படும் தவறும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும். மத்திய, மாநில அரசுகளில் முன்னாள் இராணுவத்தினர்களை வைத்து பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும்.

70. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் நிறுவனங்கள் அரசு அங்கீகாரம் அல்லது தமிழக அரசால் தமிழ்நாடு தனியார் பாதுகாப்பு சட்டப்படி (Private Security Act Tamilnadu) பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். பாதுகாப்பு பணி நிறுவனம் தமிழக காவல் துறையில் பதிவு செய்ததற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

71. ஒப்பந்தப்பணிக்கான அனைத்து வரிகளும் மத்திய, மாநில அரசுகளில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும்.

72. ஒப்பந்தப்புள்ளியின் முதல் உறையான தொழில்நுட்ப விபரங்களுடன் கூடிய முன் தகுதிகள் உறை (Pre-Qualification) முதலில் திறக்கப்பெற்று பரிசீலிக்கப்பட்டு முன்தகுதிகள் உறையில் ஒப்பந்தப்புள்ளியின் நிபந்தனைகளை முழுமையாக நிறைவு செய்த தகுதியான ஒப்பந்தபுள்ளிகளின் இரண்டாவது உறை (Price-Bid) மட்டும் திறக்கப்பெற்று பரிசீலிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

73. ஒப்பந்தப்புள்ளிகள் முன்தகுதிகள் முதல் உறை திறக்கப்பெற்று பரிசீலிக்கப்பட்டு முழுமையாக நிறைவு செய்யாத ஒப்பந்த நிறுவனத்தின் முன் வைப்புத்தொகை (EMD) காசோலை அன்றைய தினமே திருப்பி வழங்கப்படும்.

74. ஒப்பந்த பணியாளர்கள் சரிவர ஒழுங்காக பணிகள் ஏதும் செய்யவில்லை என்றாலும், தனது பணிகளில் தவறுகள் ஏதேனும் செய்தாலோ ஒப்பந்த நிறுவனத்திற்கு அபராதம் விதிப்படும் மேற்படி அபராதத் தொகை ஒப்பந்த நிறுவனத்தாருக்கு வழங்கப்படும் மாதாந்திர சம்பளத் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

75. ஒப்பந்த படிவம் விலைப்பட்டியலில் (Price Bid) குறிப்பிட்டுள்ள சேவைக் கட்டணம் கலத்தில் 5% சதவீதத்திற்கு குறைவில்லாமல் தொகை கண்டிப்பாக குறிப்பிட

வேண்டும். அவ்வாறு 5% சதவீதத்திற்கு குறைவாகவும் மற்றும் தொகை குறிப்பிடாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும். (5% and Less will be Out rightly rejected)

**76.** **ஒப்பந்தபுள்ளி படிவத்தில் குறைவான சதவீதம் சேவை கட்டணமாக குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் L1 என முடிவு செய்யப்பட்டு, விலைக்குறைப்பு பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்படும் (The Tender who has quoted lowest percentage of salary and service charges will be declared as L1 and called for rate negotiations)**

**77.** **ஒப்பந்த படிவம் விலைப்பட்டியலில் (Price Bid) குறிப்பிட்டுள்ள சேவைக்கட்டணத்தில் (Service Charge) பணியாளர்கள் சம்பளம், EPF, ESI, ஊக்க ஊதியம் ( Bonus), சீருடை ஆகிய 5 இனங்களின் மொத்த தொகைக்கு கணக்கீடு செய்து குறிப்பிட வேண்டும்.**

**78.** **i) பாதுகாப்பு பணிக்கு பணி அமர்த்தப்படும் பணியாளரின் கூலி தொகை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச கூலித்தொகை மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் நலத் துறையினரால் நிர்ணயிக்கப்படும் (Employement in security guards) குறைந்தபட்ச கூலித் தொகை, இவை இரண்டில் எதில் குறைவாக உள்ளதோ அதன் அடிப்படையில் ஒப்பந்தாரரின் ஒப்பந்த விலைப்புள்ளி ஒப்பு நோக்கப்பட்டு இறுதி முடிவு செய்யப்படும்.**
**ii) தட்டச்சர்/ கணினி பணியாளர் பணிக்கு பணி அமர்த்தப்படும் பணியாளரின் கூலி தொகை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச கூலித்தொகை மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் நலத் துறையினரால் நிர்ணயிக்கப்படும் (Employement in shops and Commercial Establishments) குறைந்தபட்ச கூலித் தொகை, இவை இரண்டில் எதில் குறைவாக உள்ளதோ அதன் அடிப்படையில் ஒப்பந்தாரரின் ஒப்பந்த விலைப்புள்ளி ஒப்பு நோக்கப்பட்டு இறுதி முடிவு செய்யப்படும்.**

**79.** ஒன்றிற்கு மேற்பட்ட ஒப்பந்த நிறுவனங்கள் ஒரே ஒப்பந்தத் தொகையை குறிப்பிட்டு இருந்தால், திருக்கோயில் நிர்வாகம் எடுக்கும் முடிவே இறுதியானது.

**80.** காலையில் பணிபுரியும் நபர்களையே தொடர்ந்து மாலையில் பணிபுரிய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**81.** ஒப்பந்த பணிகள் உரிமம் பெறும் நிறுவனம் எந்த சூழ்நிலையிலும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு ஆட்கள் தேவை என எழுத்து மூலமாகவோ, அல்லது வாய் மொழியாக எவ்வகையிலும் விளம்பரம் செய்வதாக தெரியவந்தால் ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதோடு சட்டபூர்வ மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**82.** இந்த அறிவிப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்த பாதுகாப்பு பணியை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மேற்கொள்ள வேறு ஒரு நபரிடமோ அல்லது நிறுவனத்திடமே உப ஒப்பந்தம் (Sub Contract/SubLet/இணை ஒப்பந்தம் (Joint Venture)

மேற்கொள்ளக்கூடாது. அவ்வாறு உபஒப்பந்தம்/இணை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதாக வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

83. ஒப்பந்தாரராக தேர்வு செய்யப்பட்டவர் செலுத்திய ஒப்பந்த பணிக்கான முன்வைப்புத் தொகை (EMD) ஒப்பந்தப்பணி நிறைவடைந்தவுடன் அந்த பசலி ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை வரப்பெற்றப்பின்னர் பரிசீலித்து திரும்ப வழங்கப்படும்.

84. இணைப்பில் உள்ள ஒப்பந்த நிறுவனத்தின் முன் தகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள இருபத்தைந்து (25) ஆவணங்களை மட்டும் ஒப்பந்தப்புள்ளியில் இணைக்க வேண்டும்.

உ

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

-----

மதுரை வட்டம் & மாவட்டம்

தொலைபேசி எண்.**0452–2344360** e-mail: info@maduraimeenakshi.org

திருக்கோயில் பாதுகாப்பு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

------------

-----------------------------------------------------------------

----

என்ற பெயரில் இப்படிவம் வழங்கப்படுகிறது.

பெறுநர்

இணை ஆணையர்/ செயல்அலுவலர்,
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,
மதுரை.

அய்யா,

நான்/ நாங்கள் தங்கள் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்திலும் இப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டும், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி திருக்கோயிலின் சட்ட திட்டங்களுக்கும், பாதுகாப்பு விதிமுறைகளுக்குட்பட்டும் முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு சிறப்பாக பாதுகாப்பு பணிகள் செய்து கொடுக்கின்றோம் என்பதை இதன் மூலம் உறுதி அளிக்கின்றோம்.

இடம் ஒப்பந்ததாரர் பெயர்

நாள் முகவரி

நிறுவனம் தெளிவாக

ஒப்பந்ததாரர் கையொப்பம்
(முத்திரையுடன்)

உ

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,மதுரை.

-----

## I ஒப்பந்த நிறுவனத்தின் முன் தகுதிகள்
(Pre-Qualification )

**01.** தனிநபராக இருக்கலாம், ஒப்பந்ததாரர் ஒரு நிறுவனமாக இருக்கலாம், (அ) கூட்டு நிறுவனமாக (consortium of firms) இருக்கலாம். :

**02.** ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்/ முகவரி :

**03.** இணையதள முகவரி :

மின்னஞ்சல் முகவரி :

**04.** தொலைபேசி எண் :

**05.** கைபேசி எண் :

**06.** தொலை நகலி எண் :

**07.** தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயர்/ பதவி/கைபேசி எண் :

**08.** நிறுவனத்தின் பெயரும் வகையும் (அலுவலக முத்திரையுடன்) :

**09.** கூட்டுத் தொழிலாக இருந்தால் அதற்கான கூட்டுத் தொழில் பத்திரத்தின் நகல் :

**10.** குழுமமாக இருந்தால் அதன் நடைமுறை பதிவேடு (Articles of Association) :

11. வரையறுக்கப்பட்ட (லிட்) கம்பெனி ஆக இருந்தால் கம்பெனி சட்டத்தில் பதியப்பட்டதற்கான சான்று மற்றும் கையொப்பதாரருக்கான சட்டபூர்வமான பிரதிநிதித்துவ சான்று (power of Attorney) :

12. வருமான வரி / (PAN Card No) (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

13. தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் மத்திய / மாநில / மாநகராட்சி / பொதுப்பணித்துறை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் ஆண்டு ஒன்றுக்கு 150 நபர்களுக்கு குறைவில்லாமல் பணியாளர்கள் அமர்த்தி பணி செய்ததற்கான / செய்து கொண்டிருப்பதற்கான ஒப்பந்தச் சான்றுகள் (நகல்கள் இணைக்கப்பட வேண்டும்) :

14. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பதிவு எண் (Employee Provident Fund Registration No) (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

15. தொழிலாளர் மருத்துவ காப்பீட்டு பதிவு எண் (Employee's State Insurance Corporation) (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

16. சேவை வரி பதிவு எண் (Service Tax Registration No) (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

17. சரக்கு மற்றும் சேவைவரி பதிவுச் சான்று எண் (GST Registration No) (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

18. தனியார் பாதுகாப்பு நிறுவனம் (Private Security Registration) என்பதற்கான பதிவு விவரம் (தமிழ் நாடு அரசு காவல்துறையில் பதிவு செய்ததற்கான பதிவு விபரம்) (நகல் இணைக்கப்பட வேண்டும்) :

19. ரூபாய் ஒரு கோடியே ஐம்பது லட்சத்திற்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய இரண்டு ஆண்டுகளில் வியாபார வரவு – செலவு (Trading profit and loss Account) செய்திருக்க வேண்டும். (நகல்கள் இணைக்கப்பட வேண்டும்) :

20. ஒப்பந்தப்புள்ளி கோரும் நிறுவனம் குறைந்தபட்சம் 150 நபர்களை பணியமர்த்தி பணிபுரிந்து வருகின்றனர் என்பதற்கான ஆதாரம் விவரம் மேற்படி பணியாளர்களுக்கு E.P.F., செலுத்துவதற்கான ஆதார விபரம். (நகல்கள் இணைக்கப்பட வேண்டும்) :

21. ஒப்பந்தப்புள்ளி கோரும் நிறுவனம் குறைந்தபட்சம் 150 நபர்களை பணியமர்த்தி பணிபுரிந்து வருகின்றனர் என்பதற்கான ஆதாரம் விவரம் மேற்படி :

பணியாளர்களுக்கு E.S.I.,
செலுத்துவதற்கான ஆதார விபரம்.
(நகல்கள் இணைக்கப்பட வேண்டும்)

22. முன்வைப்புத்தொகை ரூ.2,00,000/– :
இணை ஆணையர்/செயல் அலுவலர்,
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்
திருக்கோயில் மதுரை. என்ற பெயரில்
செலுத்தப்பட்டதற்கான விபரங்கள் (வங்கி
விபரம், வரைவோலை எண் மற்றும் நாள்)

23. ஒப்பந்த தொழிலாளர் ஒழிப்பு, ஒழுங்கு :
முறை சட்டப்படி (Contract Labour
Abolition and regularization Act) பதிவு
செய்யப்பட்ட விபரம் (நகல் இணைக்கப்பட
வேண்டும்)

24. இதர கூடுதல் தகுதிகள் ஏதும் இருப்பின் :
அதன் விவரம்
(நகல் இணைக்கப்பட வேண்டும்)

25. பிரமாணப்பத்திரம் இணைக்கப்பட்ட விபரம் :

ஒப்பந்ததாரர் கையொப்பம்
(முத்திரையுடன்)

உ



உ

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,மதுரை.

-----

வேலையின் பெயர் : இத்திருக்கோயில் வளாகங்கள் மற்றும் உபகோயில்களில் பாதுகாப்பு பணிக்கு வெளிமுகமை (Out Sourcing) முறையில் முன்னாள் இராணுவத்தினரை ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த பணியாளர்களை கொண்டு செய்யும் பணி.
(ஒப்பந்த காலம் ஆணையர் உத்தரவு தேதி முதல் 30.06.2022 வரை) பசலி 1432

குறிப்பு : **i) வரிசை எண்.1 மற்றும் 2–ல் உள்ள பணிக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச கூலித்தொகை மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் நலத் துறையினரால் நிர்ணயிக்கப்படும் (Employement in security guards) குறைந்தபட்ச கூலித் தொகை, இவை இரண்டில் எதில் குறைவாக உள்ளதோ அதன் அடிப்படையில் ஒப்பந்தாரரின் ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பு நோக்கப்பட்டு இறுதி முடிவு செய்யப்படும்.**

**ii) வரிசை எண்.3–ல் உள்ள பணிக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச கூலித்தொகை மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் நலத் துறையினரால் நிர்ணயிக்கப்படும் (Employement in shops and Establishments) குறைந்தபட்ச கூலித் தொகை, இவை இரண்டில் எதில் குறைவாக உள்ளதோ அதன் அடிப்படையில் ஒப்பந்தாரரின் ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பு நோக்கப்பட்டு இறுதி முடிவு செய்யப்படும்.**

## விலைப்பட்டியல் (Price Bid)

| வ.எண் | பணி விபரம் | தேவைப்படும் நபர்கள் (ஒரு நாளைக்கு) | ஒரு மாதத்திற்கு கூலித்தொகை ஒரு நபருக்கு | | | மொத்த நபர்களுக்கு மாதம் 1–க்கு மொத்த தொகை (3 x 6) | மொத்த நபர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி இ.பி.எப் 13% (ஒரு மாதத்திற்கு) | மொத்த நபர்களுக்கு இ.எஸ்.ஐ 3.25% (ஒரு மாதத்திற்கு) | ஒரு ஆண்டுக்கு மொத்தம் தொகை (7+8+9) X 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 01. | இத்திருக்கோயில் மற்றும் உபகோயில் பாதுகாப்பு பணி | 65 நபர்கள் | Basic | D.A | கூடுதல் | | | | |
| 02. | பாதுகாப்பு பணி மேற்பார்வையாளர் | 2 நபர்கள் | Basic | D.A | கூடுதல் | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03. | தட்டச்சு / கணினி பணியாளர் | 2 நபர்கள் | Basic | D.A | கூடுதல் | | | | |
| 04. | மின் உதவியாளர் (ஐ.டி.ஐ தேர்ச்சி பெற்றவர்) | 2 நபர்கள் | ரூ.10000 | | | | | | |
| 05. | குங்குமம் மிஷின் இயக்குபவர் (ஐ.டி.ஐ தேர்ச்சி பெற்றவர்) | 1 நபர் | ரூ.10000 | | | | | | |
| 06. | டிப்ளமோ சிவில் இன்ஜினியர் | 2 நபர்கள் | ரூ.13000 | | | | | | |
| 07. | திருக்கோயில் டிராக்டர் ஓட்டுநர் | 1 நபர் | ரூ.10000 | | | | | | |
| 08. | கூடல் செங்குளம் பண்ணை விவசாயம் மற்றும் காவல் பணியாளர்கள் | 2 நபர்கள் | ரூ.10000 | | | | | | |
| 09. | திருக்கோயில் பேட்டரிகார் / ஆம்புலன்ஸ் ஓட்டுநர் | 1 நபர் | ரூ.10000 | | | | | | |
| 10. | பிளம்பர் | 1 நபர் | ரூ.10000 | | | | | | |
| | மொத்த பணியாளர்கள் | 79 நபர்கள் | | | | | | | |
| 11. | ஊக்க ஊதியம் (Bonus) (ஒரு வருடத்திற்கு அனைத்து நபர்களுக்கும்) | ---- | ---- | | | ---- | ---- | ---- | |
| 12. | பணியாளர் சீருடை (2 செட்) மற்றும் அடையாள அட்டை செலவு உள்பட (ஒரு வருடத்திற்கு கணினி பணியாளர், டிப்ளமோ சிவில் இன்ஜினியர் / டிராக்டர் ஓட்டுநர், விவசாயப் | ---- | ---- | | | ---- | ---- | ---- | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பணியாளர்கள் தவிர்த்து மொத்தம் 72 பணியாளர்களுக்கு மட்டும்) | | | | | | | | |
| 13. | சேவைக் கட்டணம் (Service Charge) (ஒரு வருடத்திற்கு அனைத்து நபர்களுக்கும்) | –––– | ---- | | | –––– | –––– | –––– | |
| 14. | சட்டப்படியான சரக்கு மற்றும் சேவை வரி (GST) 18% (ஒரு வருடத்திற்கு அனைத்து நபர்களுக்கும்) | –––– | ---- | | | –––– | –––– | –––– | |
| 15. | ஒரு மாதத்திற்கான மொத்தச் செலவு தொகை (அனைத்து வரிகளும் உள்பட) | | | | | | | | |
| 16. | ஒரு ஆண்டுக்கு மொத்த தொகை ரூபாய் (அனைத்து வரிகளுடன்) | | | | | | | | |

ஒப்பந்ததாரர் கையொப்பம்
(முத்திரையுடன்)